புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | அக்டோபர் 28, 2021 | புரட்சி 20 | முழக்கம் 35 | விலை: ரூ.3.00

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்ப கொளத்தூர் மணி வேண்டுகோள்

# ‘கலப்பு’ திருமண சான்றிதழ் – நடுவண் அரசின் குழப்பங்கள்

*தந்தை அல்லது தாய் இருவரில் எவர் ஒருவரின் ஜாதியையும் விண்ணப்பதாரர் விருப்பப்படி ஏற்கலாம் என்ற நடைமுறை தமிழ்நாட்டில் இருக்கிறது. ஒன்றிய ஆட்சி இதை ஏற்க மறுத்து பணி நியமனங்களை தடை செய்து வருகிறது. இது குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என்று தமிழக எம்.பி.க்களுக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கோரிக்கை விடுத்துள்ளார்.*

கலப்பு திருமணம் செய்த பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைக்கு தந்தையின் ஜாதி அல்லது தாயின் ஜாதி, இதில் இருவருக்கும் எதில் விருப்பமோ அதன் அடிப்படையில் குழந்தைக்கு ஜாதி சான்றிதழை வழங்க வேண்டும் என தமிழக அரசு சமீபத்தில்கூட அரசாணை வெளியிட்டுள்ளது .ஏற்கனவே இதுபோன்ற உத்தரவுகள் நாடு முழுவதும் இருந்து வருகிறது. இதன் அடிப்படையில் கலப்புத் திருமணம் புரிந்தோர் தங்கள் வாரிசுகளுக்கு ஏதேனும் ஒரு ஜாதி சான்றிதழ் பெற்று வருகின்றனர்.

ஆனால் மத்திய அரசின் உயர் பதவிகளுக்கு செல்லும் இடங்களில் ஜாதி சான்றிதழ் சரிபார்ப்பின் போது பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதாக கூறப்படுகின்றது,

உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன் பீகார் மாநிலம் கயா மாவட்டத்தைச் சார்ந்த அஞ்சன் குமார் என்பவர் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றிபெற்று, அவருடைய சான்றிதழ் சரிபார்ப்பில் அவருடைய தாயாரின் ஜாதி அடிப்படையில் எஸ்டி சான்றிதழ் பெற்றிருந்தபோதும், அவருடைய தந்தை பிற்படுத்தப்பட்டவர் என்பதால் இந்த சான்றிதழ் செல்லாது என அறிவிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றமும் இதையே உறுதி செய்தது. இதனால் அவருக்கான இட ஒதுக்கீடு உரிமை கிடைக்காமல் போனது.

கலப்பு திருமணம் புரிந்தோருக்கு இது போன்ற பல்வேறு சிக்கல்கள் குழப்பங்கள் இருப்பதை அறிந்த இந்திய கலப்புத் திருமண தம்பதிகள் சங்கத் தலைவர் அழகேசன் என்பவர், மத்திய உள் துறை அமைச்சகத் திற்கு, இது தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கீழ் கடந்த 2019ஆம் ஆண்டு ஒரு விண்ணப்பம் செய்திருந்தார். அதில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் யார் என 1975ஆம் ஆண்டு மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள வழிகாட்டு கோட்பாடுகள் யாரால், எப்போது, எந்த அடிப் படையில் உருவாக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள விரும்புவதாகவும், இது தொடர்பான நகல் களையும் கேட்டிருந்தார். உள்துறை அமைச்சகத்தில் இருந்து, சமூகநீதி மற்றும் ஆற்றல் மேம்பாட்டு துறைக்கு பதில் அளிக்குமாறு அனுப்பப் பட்டுள்ளது. அங்கு இது தொடர்பான கோப்புகள் எதுவும் இல்லை எனவும், பழங்குடியினர் துறைக்கு நகல் அனுப்பப்பட்டது. அங்கும் கோப்புகள் இல்லை என தகவல் அனுப்பப்பட்டதால் அழகேசன், மத்திய தகவல் ஆணையரிடம் மேல் முறையீடு செய்திருந்தார்.

தொடர் முறையீட்டின் விளைவாக, இது தொடர்பான விசாரணை, வீடியோ கான்ப்ரன்ஸ் மூலம் அக்.19 அன்று நடைபெற்றது. சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வீடியோ காண்ப்ரன்ஸ் அறையில் இருந்து இந்திய கலப்புத் திருமண தம்பதிகள் சங்கத் தலைவர் அழகேசன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கலப்புத் திருமண தம்பதிகள் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

டெல்லியில் இருந்து தேசிய தகவல் ஆணையர் வனஜா என் சர்னா, உள்துறை அமைச்சகம், சமூக நீதி மற்றும் ஆற்றல் மேம்பாட்டுத் துறை, பழங்குடியினர் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த தகவல் வழங்கும் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

சில நிமிடங்கள் மட்டுமே நடைபெற்ற இந்த விசாரணையில், சமூக நீதி மற்றும் ஆற்றல் மேம்பாட்டுத் துறையைச் சார்ந்த அதிகாரி ஹிந்தியில் பதிலளித்தார். மத்திய தகவல் ஆணையர் வனஜா என் சர்ணா மனுதாரருக்கு எந்த உதவியும் செய்யமுடியாது என ஆங்கிலத்தில் பதில் அளித்து விசாரணையை முடித்துக் கொண்டார். இதனால் சேலத்தில் இருந்து பங்கேற்ற கலப்புத் திருமண தம்பதிகள் சங்கத்தினர் ஏமாற்றம் அடைந்தனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கொளத்தூர் மணி, ஜோதி என்ற உயர் ஜாதியைச் சார்ந்தவர் வெங்கடாசலம் என்ற பட்டியல் வகுப்பைச் சார்ந்தவரை திருமணம் செய்து கொண்டு, தனித் தொகுதியில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, 1967 வரை காங்கிரஸ் கட்சி சார்பில் அமைச்சராகவும் இருந்துள்ளார். பின்னர் இந்த நடைமுறை 1975 இல் எப்படி மாற்றப்பட்டது என்று தெரியவில்லை. இது தொடர்பான குழப்பங்களை நீக்கி, தெளிவு பெறு வதற்காக, கேட்கப்பட்ட தகவல்கள் வழங்கப்பட வில்லை. எந்தத் துறையிலும் அதற்கான கோப்புகள் இல்லை என்கிறார்கள் என்று தெரிவித்தார்.

நடைபெற்ற வீடியோ காண்ப்ரன்ஸ் விசாரணை யிலும் உரிய பதில் கிடைக்காததால் எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்ற அவர், எனவே இது தொடர்பாக தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி உரிய தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக அழகேசன் கூறும்போது, இதுபோன்ற சிக்கல்களால், கலப்புத் திருமணம் புரிந்தவர்களுக்கும், அவர்களது வாரிசுகளுக்கும், பட்டியல் இனத்திற்கான இட ஒதுக்கீடு உரிமைகள் கிடைப்பதில்லை. எனவே இந்த பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் எனவும், கலப்புத் திருமண தம்பதிகளுக்கு ஜாதியற்றோர் என்ற தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 28.10.2021**

## ஜாதி வெறித் தடைகளை முறியடித்து வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் இளமதி–செல்வன் இணையருக்கு மேட்டூரில் கழகம் நடத்திய உற்சாகப் பாராட்டு விழா




*23.10.2021 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக பெரியார் 143ஆவது பிறந்தநாள் – சமூகநீதி நாள் பொதுக் கூட்டம் மேட்டூர் சதுரங்காடி திடலில் சிறப்பாக நடைபெற்றது.*

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இணைந்த ஜாதி மறுப்பு இணையர் இளமதி – செல்வன் திருமண வரவேற்பு நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் இருந்து இளமதி – செல்வன் இருவரையும், தோழர்களின் பறை இசை முழங்க கழகத் தலைவர், கழகத் தோழர்கள் வருகையோடு பொதுக்கூட்ட மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். சாலையில் உள்ள பொதுமக்களும், வியாபாரிகளும் ஜாதி மறுப்பு இணையரை மகிழ்ச்சி பொங்க பார்த்தனர்.

பொதுக்கூட்டத்தின் முதல் நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர்.பகுத்தறிவு இசைக்குழுவின் சார்பாக மூட நம்பிக்கை ஒழிப்பு – ஜாதி ஒழிப்பு பாடல்கள் பாடப்பட்டன. அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் தொடங்கியது. கூட்டத்திற்கு மேட்டூர் நகர செயலாளர் பிரதாப் தலைமை வகித்தார். பொதுக் கூட்டத்தில் மக்கள் வழக்குரைஞர் ப.பா. மோகன் , பகுஜன் சமாஜ் கட்சி சேலம் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் பார்த்திபன், திவிக வேலூர் மாவட்ட செயலாளர் வழக்குரைஞர் இரா. சிவா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மேட்டூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி, நங்கவள்ளி கழகத் தோழர் பிரபாகரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

நிறைவாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை நிகழ்த்தினார்கள். தலைவர் நிறைவுரையின்போது மழை தொடங்கியது. இருந்தாலும் தோழர்கள் அருகில் உள்ள கடை பகுதிகளில் நின்றும், குடை பிடித்தும் பேச்சை கேட்டனர். கழகத் தலைவர் நிறைவுரையைத் தொடந்து ஜாதி மறுப்பு இணையர் இளமதி – செல்வம் இருவரும் ஏற்புரை ஆற்றினர். நிறைவாக குமரன் நகர கிளைக் கழக பொருளாளர் அ.திவாகர் நன்றியுரை கூற கூட்டம் நிறைவுற்றது.

கூட்டத்திற்கு நங்கவள்ளி, மேட்டூர் RS, மேட்டூர் நகரம், கொளத்தூர், காவலாண்டியூர், திருப்பூர், வேலூர் ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர். இரவு மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது.

இதற்கு முன்னர், இளமதி – செல்வன் திருமணம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில் முறையாக அரசில் பதிவு செய்யப்பட்டது. கழகத் தலைவரின் வழிகாட்டுதலின்படி தோழர் செல்வன் சொந்த ஊரான கவுந்தப்பாடி அலுவலகத்தில் 22.10.2021 அன்று பதிவு நடைபெற்றது.

இதில், கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம இளங்கோவன், தலைமைக் குழு உறுப்பினர் காவலாண்டியூர் ஈசுவரன், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு, ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் கோபி நிவாஸ், கவுந்தப்பாடி மதிமுக மதியழகன், ம.தி.மு.க. ஒன்றிய செயலாளர் வீரகுமார் ஆகியோரும் கழகத் தோழர்களும் உடனிருந்தனர். பதிவு செய்த பிறகு மகிழ்ச்சியை பகிரும் விதமாக தோழர்களால் கூடியிருந்த அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

தலையங்கம்

## பிணமான பிறகும் விடாத ஜாதிவெறி

ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் பிணங்களை எரிக்க விடாத வெட்கக் கேட்டைக் கடுமையாகக் கண்டித்துள்ள சென்னை உயர்நீதிமன்றம், மனிதன் பிணமான பிறகும்கூட ஜாதி விடுவதில்லை என்று வேதனை தெரிவித்துள்ளது. பொள்ளாச்சி வட்டம் ஏரிப்பட்டி கிராமத்தில் தலித் மக்கள் இறந்தவர்களை மயானத்தில் எரிக்க அனுமதிக்கப்படாததால் சாலை ஓரங்களில் உடலை எரித்து வருகிறார்கள். கிராம மக்களுக்கு அரசு பொதுவான 'மயானத்துக்கு' இடம் ஒதுக்குகிறது. ஆனால், உள்ளூர் ஜாதி வெறியர்கள் 'தலித்' மக்கள் சடலங்களை எரிக்க அனுமதிப்பதில்லை. இது தொடர்பான வழக்கில் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் இந்த வேதனைகளைப் பதிவு செய்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள பிச்சுவிளை கிராம பஞ்சாயத்துத் தலைவர் பதவி தலித் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அய்ந்து தலித் அல்லாத தொகுதி உறுப்பினர்கள், தலித் பெண் தலைவரின் கீழ் உறுப்பினராக இருக்க முடியாது என்று கூறி வெற்றி பெற்ற இரண்டாவது நாளிலேயே தங்கள் பதவியிலிருந்து விலகி விட்டனர். 2019இல் இதே கிராமத்தில் தேர்தல் நடந்தபோது மொத்தமுள்ள 827 வாக்காளர்களில் இந்த கிராமத்தினர் தலித் பெண் தலைவரை ஏற்க முடியாது என்று தேர்தலை புறக்கணித்தனர். 13 வாக்குகள் மட்டுமே பதிவாயின. இதில் 10 வாக்குகளைப் பெற்று இராஜேஸ்வரி என்ற தலித் பெண் பஞ்சாயத்து தலைவரானார். இப்போது தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள உள்ளூர் தலித் அல்லாத 'கவுன்சிலர்கள்' பதவியிலிருந்து விலகி எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

'குறவர்' பழங்குடி சமூகத்தைச் சார்ந்த பெண் ஒருவர் பேசிய வீடியோ பதிவு முகநூலில் 'வைரலாக' பரவிக் கொண்டிருக்கிறது. பெண்களுக்கு அரசு இலவசப் பயணத்தை அறிவித்தாலும் நிறுத்தங்களில் இந்த சமூகப் பெண்கள் பேருந்தில் ஏற்ற ஓட்டுநரும் நடத்துநரும் மறுத்து பேருந்தை நிறுத்துவதே இல்லை. கோயில்களில் அரசு நடத்தும் 'அன்னதான'த்தில் சாப்பிட உட்கார்ந்தவர்களை ஜாதி வெறியர்கள், சாப்பாடு பந்தியிலிருந்து வெளியேற்றி, 'எச்சில் இலை'யைத்தான் நீங்கள் சாப்பிட வேண்டும் என்று அவமதித்ததாக அப்பெண் புயலாக சீறியிருக்கிறார். கடந்த காலங்களில் நாங்கள் சுகாதாரமற்ற வாழ்க்கை முறையில் இருந்தோம் என்றாலும் இப்போது நவீன வாழ்க்கைக்குத் திரும்பிய பிறகும் இந்த ஜாதிய கொடுமை நடக்கிறது என்று கூறிய அவர், பிணங்களை சுடுகாட்டுக்குக் கொண்டு போய் சுத்தம் செய்ய மட்டும் நாங்கள் தேவைப்படுகிறோம்; அப்போது எந்தப் பிணமாவது எழுந்து என்னைத் தொடாதே என்று கூறியதா என்ற அறிவுபூர்வமான கேள்வியை எழுப்புகிறார். "எங்கள் பிள்ளைகளை நாங்கள் படிக்க வைப்போம்; இனி வரும் காலத்தில் அவர்கள் இதைத் தட்டிக் கேட்பார்கள்" என்று நம்பிக்கையோடும் உறுதியோடும் அந்தப் பெண் பேசுகிறார்.

வன்னியர் ஜாதிப் பெண் இளமதியும் தலித் சமூகத்தைச் சார்ந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் செல்வனும் ஒருவரையொருவர் விரும்பி திருமணம் செய்ய முன் வந்தபோது, காவலாண்டியூர் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் அவர்களுக்கு மண நிகழ்வை நடத்தி அடைக்கலம் தந்தார்கள். ஜாதிவெறிக் கூட்டம் நள்ளிரவில் கழகத் தோழர் காவலாண்டியூர் ஈசுவரனை அடைக்கலம் தந்தார் என்பதற்காகக் கடத்தி கொடூரமாகத் தாக்கியதோடு, இளம் காதலர்களையும் கட்டாயமாகப் பிரித்தது. ஒன்றரை ஆண்டு சட்டப் போராட்டத்துக்குப் பிறகு திராவிடர் விடுதலைக் கழகத்தின் இடைவிடாத முயற்சியால் இணையர்கள் மீண்டும் இணைந்துள்ளனர். கழகத் தோழர்கள் மேட்டூரில் குடும்பம் குடும்பமாய் திரண்டு மணமக்களை மேட்டூர் வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்று பாராட்டு விழா பொதுக் கூட்டத்தையும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடத்தியிருக்கிறார்கள்.

இந்த நிகழ்வு, ஒரு வரலாற்று சம்பவத்தை நினைவுகூர்வதாக இருக்கிறது. 1930ஆம் ஆண்டு வைதீகக் குடும்பத்தில் பிறந்து இளம் வயதில் கணவனை இழந்த சிவகாமிக்கும் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த தமிழறிஞர் சாமி. சிதம்பரனாருக்கும் ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணத்தை நாகம்மையார் தலைமையில் பெரியார் நடத்தினார். அன்று மாலையே இத்தகைய திருமணங்கள் மக்களிடம் பரப்பிட வேண்டும் என்ற நோக்கத்தோடு மணமக்களை ஈரோடு வீதிகளில் ஊர்வலமாக சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் அழைத்துச் சென்றனர். மக்கள் இருபுறமும் கூடி வியந்து இந்தக் காட்சியைப் பார்த்தனர். சுமார் 91 வருடங்களுக்குப் பிறகும் ஜாதி இறுக்கம் தளர்ந்திருக்கிறதே தவிர, அதன் அடிப்படையான கட்டமைப்பு வலிமையுடனேயே இருக்கிறது.

'பிராமணர்கள்' ஜாதிக்குள்ளேயே திருமணம் நடத்த வேண்டும் என்றும், 'பிராமணர்கள்' பேசும் 'ஆத்து மொழி', 'தூர்த்தம்' அடையாளத்தை விட்டுவிடக் கூடாது என்றும், 'தமிழ்நாடு பிராமணர் சங்கத் தலைவர்' நாராயணன் 'காணொலி'களில் இப்போதும் பேசி வருகிறார். புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர் டாக்டர் கிருஷ்ணசாமி, 'இளைஞர்கள் ஜாதி கடந்து காதலிப்பதை நிறுத்துங்கள்' என்று வெளிப்படையாகவே கூறுகிறார். பா.ம.க.வின் சார்பில் தொலைக்காட்சி விவாதத்தில் பேசிய ஒரு வழக்கறிஞர், ஜாதியை எதற்காக ஒழிக்க வேண்டும் என்று கேட்கிறார். ஆர்.எஸ்.எஸ்.களாக 'அவதாரம்' எடுத்துள்ள ஒரு சில தமிழ்த் தேசிய அமைப்புகள், தமிழர்களை அடையாளப்படுத்த ஜாதியை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றன. பெற்றோர்கள் ஏற்பாடு செய்யும் திருமணத்தையே ஏற்றுக் கொள்ளுங்கள் என்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினரும் தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் மகனுமான கதிர் ஆனந்த் முகநூலில் பதிவிடுகிறார். ஆக ஜாதி வெறி இன்று பல்வேறு வடிவங்களில் புதிய புதிய வாதங்களோடு புறப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் ஜாதி எதிர்ப்புக்கான இயக்கங்கள் மேலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையையே இவை உணர்த்தி நிற்கின்றன.

# ஆகம விதிகள் - பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரிமையானதா?

தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டு கோவில்களில் முறைப்படி பயிற்சிப் பெற்ற சில பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களை, துணை அர்ச்சகர்களாக நியமித்தது, பார்ப்பனர்களால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. ஆகாயத்துக்கும், பூமிக்கும் துள்ளி குதிக்கிறார்கள். கோவில்களில் கடவுள்களே இல்லை என்று கூறுகிறார்கள். நீதி மன்றங்களில் வழக்குகளை தொடர்கிறார்கள். உச்சநீதி மன்றம் வரை சுப்ரமணியசாமி சென்றிருக்கிறார். சென்னை உயர்நீதி மன்றத்திலும் இது தொடர்பாக ஏராளமான வழக்குகள் வந்திருக்கின்றன.

20.10.2021 அன்று இது தொடர்பாக வழக்கு விசாரணையை சென்னை உயர்நீதிமன்றம் எடுத்திருக்கிறது. அதில் ஒரு பிரச்சனையில் உயர்நீதி மன்றம் திட்டவட்டமான ஒரு கருத்து கூறியிருக்கிறது. தமிழ்நாடு அரசு பிறப்பித்திருக்கிற இந்த அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்று கூறி, இரு தரப்புக்கும் உரிய விளக்கம் கேட்டு தாக்கீதுகளை அனுப்பியிருக்கிறது. அர்ச்சகர்கள் சார்பில் இப்போது என்ன வாதங்களை முன் வைக்கிறார்கள் ?

1959ஆம் ஆண்டு இந்து அறநிலையத்துறை சட்டம் வந்தது. அந்த சட்டத்தின் படி கோவில்களில் அர்ச்சகர்களை நியமிக்கும் அதிகாரம் கோவிலில் இருக்கும் அறங்காவலர்களுக்குத் தான் உள்ளது. இந்து அறநிலையத்துறைக்கு அந்த அதிகாரம் கிடையாது என்று அவர்கள் வாதாடுகிறார்கள். 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இந்து அறநிலையத்துறை சட்டங்களில் சில திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறது.

அந்த திருத்தத்தின் படி ஒருவர் அர்ச்சகராக இருக்க வேண்டும் என்று சொன்னால், 18 வயதில் இருந்து 35 வயது வரை தான் அர்ச்சகராக இருக்க முடியும். அதுவும் மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். இந்த இரண்டு விதிகளும் செல்லாது என்று பார்ப்பனர்கள் நீதிமன்றத்தில் வாதாடுகிறார்கள். தங்களுக்கு ஓய்வு கிடையாது, வயது வரம்பை தங்களுக்கு நிர்ணயிக்க முடியாது, மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது, எங்களுக்கு ஆகம, வேத அறிவு பாரம்பரியம் பாரம்பரியமாக எங்களது குடும்பத்தில் இருந்து வந்து கொண்டிருக்கிறது, என்று அவர்கள் நீதிமன்றத்தை நாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

மற்றொரு வாதத்தையும் அவர்கள் முன் வைக்கிறார்கள். ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு ஆகம விதிமுறைகள் உள்ளன. மொத்தம் 26 ஆகமங்கள் இருக்கின்றன. வைணவத்திலே இரண்டு ஆகமங்கள் உண்டு. ஒரு கோவிலில் உள்ள ஆகமத்தை மற்றொரு கோவிலுக்கு பின்பற்றக்கூடாது. என்றெல்லாம் வாதிடுகிறார்கள். எந்த கோவிலுக்கு எந்தெந்த ஆகமங்களை பின்பற்ற வேண்டும் என்று நிர்ணயித்தது யார்? எந்த காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது? என்ற கேள்விகளுக்கெல்லாம் அவர்களிடம் பதில் இல்லை. இவர்கள் சொல்வதையெல்லாம் வேத வாக்காக நீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். சரி இருக்கட்டும்.

ஒவ்வொரு கோவிலுக்கு ஒவ்வொரு ஆகம முறை இருக்கிறதென்றால், அர்ச்சகராக நியமிக்கப்படுபவர், அந்த கோவிலுக்குரிய ஆகமங்களை கண்டறிந்து, அதன்படி அர்ச்சகர், பூசை முறைகளை செய்வதில் என்ன தடை இருக்கிறது ? அதை ஏன் இவர்கள் எதிர்க்க வேண்டும் ? இதில் பிரச்சனை என்னவென்று சொன்னால், ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு ஆகம முறை இருக்கிறது.


அதே போல ஒவ்வொரு கோவிலுக்கும், எங்கள் பிராமண குலத்தைச் சேர்ந்த சாஸ்திரியோ, ஷர்மாவோ, அய்யரோ, அய்யங்காரோ மட்டும் தான் பூசை செய்ய வேண்டும். அந்த ஆகமத்தை ஓத வேண்டும் என்ற விதியும் அதில் சேர்ந்திருக்கிறது என்று ஆகமத்தை தங்களுடைய பார்ப்பனிய தர்மத்தோடு, பார்ப்பனிய அடையாளத்தோடு இணைத்துக் கொண்டு பேசுகிறார்கள். இதை வெளிப்படையாகப் பேசாமல் சட்டங்களில் புகுந்து கொண்டு வியாக்கியானம் செய்து கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

2021 ஆம் ஆண்டிலும் கூட, எங்களுக்கு பயிற்சி என்ற ஒன்று கிடையாது. பாரம்பரியமாக வேத வழிமுறையில் வந்தவர்கள். எங்களுக்கு ஓய்வு வயது என்று யாரும் நிர்ணயிக்க முடியாது. நாங்கள் எந்தக் கோவிலில் இருக்கிறோமோ, அந்தக் கோவிலில் நாங்கள் மட்டுமே தான், அந்தக் கோவில் இருக்கும் வரை, அந்தக் கடவுள் இருக்கும் வரை அர்ச்சகராக இருக்க வேண்டும். நாங்கள் பூ தேவர்கள், தேவர்களாக பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள். என்றெல்லாம் சொல்லிக்கொண்டு இன்றைக்கு ஒரு கூட்டம் நீதிமன்றம் வரை சென்று வழக்குகளை தொடுத்துக்கொண்டு இருக்கிறது.

இதை வெளிப்படையாகக் கூறாமல் 1959 ஆம் ஆண்டு சட்டம், 2020 ஆம் ஆண்டு சட்டம், அறநிலையத் துறைக்கு உரிமை கிடையாது, திருத்தப்பட்ட விதிகளை ஏற்க முடியாது என்று சட்டங்களிலே புகுந்து கொண்டு தங்களுடைய சனாதன வைதீகத்தை பாதுகாக்க துடித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இப்படித்தான் இந்து மதத்தின் பிடி என்பது, பார்ப்பனியத்துக்குள், சனாதனத்துக்குள் வலுவாக சிக்கிக் கொண்டு இருக்கிறது. இதில், நாங்கள் 'தமிழ் இந்து' ஆரியத்தை வீழ்த்தப் போகிறோம் என்று சொல்கிறவர்கள் இதிலிருந்து எப்படி மீண்டு வரப்போகிறார்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

### தீபாவளி கொண்டாடலாமா?



திராவிடர் இன உணர்ச்சியைத் தொலைக்க, ஆரிய முன்னோர்கள் கட்டிய கதையை நம்பிக் கொண்டு, இன்றைக்கும் நம்மைத் தேவடியாள் பிள்ளைகள் எனக் கருதும் பார்ப்பனர்கள் கொண்டாடுவதிலாவது ஏதேனும் அர்த்தமிருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், மானமுள்ள திராவிடன் எவனாவது இந்த தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடலாமா? என்று கேட்கிறோம்.

தோழர்களே! தீபாவளி திராவிடனின் மானத்தைச் சூறையாடத் திராவிடனின் அறிவை அழிக்கத் திட்டமிடப்பட்ட தீ நாள்! இந்தத் தீ நாள் திராவிடனின் நல்வாழ்வுக்குத் தீ நாள். இந்தத் தீயநாளில் நீங்கள் செய்ய வேண்டிய வேலை என்ன? தன் தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுக் கொள்வதா? யோசியுங்கள்!

குடிஅரசு - தலையங்கம் - 15.10.1949

# பா.ஜ.க. நடத்தும் ‘புஷ்யமித்ரசுங்கன்’ ஆட்சி

*பிரிட்டிஷ் ஆட்சி – காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறுகளைத் தொடர்ந்து இத்தொடரில் – அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் ‘இருண்டகால’ வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.*

விடுதலை இராசேந்திரன்

### பா.ஜ.க.வின் இருண்ட காலம்

இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத இருண்ட காலம் பா.ஜ.க.வின் ஆட்சிக் காலம். மவுரியப் பேரரசை வீழ்த்திவிட்டு புஷ்யமித்திர சுங்கன் ஆரிய வேதமத ஆட்சியை நிறுவிய காலம். இப்போது மீண்டும் திரும்பி இருக்கிறது. ‘இராஷ்டிரிய சுயம் சேவக் சங்’ (ஆர்.எஸ்.எஸ்.) என்ற வேத கால ஆட்சியை மீட்டுருவாக்கம் செய்யும் அமைப்பின் காலடியில் மோடி ஆட்சியின் அதிகாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியம் அதிகார மய்யங்களை வழி நடத்தி வருகிறது. ஒற்றை ஆட்சி என்ற இலக்கு நோக்கி சட்டங்கள் மாற்றப்படுகின்றன; கருத்துரிமைகள் நசுக்கப்படுகின்றன. ‘மதச் சார்பற்ற’ ஆட்சி என்ற அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள சொற்றொடர் முற்றாக உயிரற்றவையாக்கப்பட்டுள்ளன. மாநிலங்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு, ‘சமஸ்கிருத’ பண்பாடே ஒரே பண்பாடு என்ற திணிப்புகள் வேகமெடுத்துள்ளன.

1) தேசியம் (Nationalism) 2) எதேச்சதிகாரம் (Authoritarianism), 3) மதப் பெரும்பான்மை (Majoritarianism) என்ற மூன்று அடிப்படைத் தளங்களில் இந்த பார்ப்பனிய அரசு கட்டமைக்கப்பட்டு வருகிறது. ‘தேசியம்’ என்ற பா.ஜ.க.வின் கருத்தாக்கம் எது? இது ‘இந்து தேசியம்’ என்பதுதான். ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் இப்படி கூறுகிறார்:

“இங்கிலாந்தில் வசிப்பவர்கள் ஆங்கிலேயர்கள் என்று அழைக்கப்படும்போது, ஜெர்மனியில் வசிப்பவர்கள் ஜெர்மானியர்கள் என்று அழைக்கப் படும்போது, அமெரிக்காவில் வசிப்பவர்கள் அமெரிக்கர்கள் என்று அழைக்கப்படும்போது இந்துஸ்தானத்தில் இருப்பவர்கள் மட்டும் ஏன் இந்துக்கள் என்று அழைக்கக் கூடாது” (2014, ஆகஸ்ட் 10இல் கட்டாக்கில் பேசியது). அதே உரையில், “இந்தியாவில் உள்ள அனைவரின் கலாச்சார அடையாளம் இந்துத்துவா. நாம் அனைவருமே இந்த மாபெரும் கலாச்சார வழி வந்தவர்கள்” என்றும் குறிப்பிட்டார்.

இந்த உரை எதை உணர்த்துகிறது? இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரும் மதங்கள், கடவுளை மறுக்கும் நாத்திகர்களும், அதாவது இந்து அடையாளத்தை ஏற்க மறுக்கும் எவரையும் இந்த நாட்டின் குடிமக்களாகவே கருதக் கூடாது என்பதே இந்த உரையின் மய்யமான கருத்து. இது அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கே எதிரானது; அரசியல் நிர்ணய சபையிலேயே இது குறித்து விவாதங்கள் நடந்தன. அரசியல் சட்டத்தின் முதலாவது பிரிவு - ‘இந்தியா, அதாவது பாரத்’ மாநிலங்களின் ஒன்றியமாக (Union of States) இருக்கும் என்று வரையறுத்தது. ‘இந்துஸ்தான்’ என்ற சொல்லை ஏற்கவில்லை. சங்பரிவாரங்கள் ‘இந்தியா’ என்ற சொல்லையே ஏற்க மறுப்பவர்கள்; அது இஸ்லாமியர், கிறிஸ்தவர்களை உள்ளடக்கிய சொல் என்றும், ‘பாரதியம்’ என்பதே இந்துக்களுக்கான அடையாளம் என்றும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத் தலைவர் கோல்வாக்கர் கூறுகிறார். (ஆதாரம்: Bunch of thoughts - நூல்) இதன் காரணமாக பா.ஜ.க. உள்ளிட்ட சங்பரிவாரங்களின் அனைத்து அமைப்புகளுமே ‘பாரதிய’ எனும் பெயரை மட்டுமே கொண்டுள்ளன.

### ஒடுக்குதலிலிருந்து ஒழித்தல் நோக்கி...

மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு மொழி அடையாளத்தை நீக்கி மத அடையாளமான இந்து தேசமாக்க அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துகிறது பா.ஜ.க. ஆட்சி. இந்திய தேசியம் என்ற இப்போதுள்ள கட்டமைப்பே பார்ப்பன-பனியா பன்னாட்டு சுரண்டலுக்கு கதவு திறந்துள்ளது. இனங்களின் உரிமைகளை ஒடுக்குகிறது என்பது நமது பார்வை. இப்போதுள்ள நடுவண் பா.ஜ.க. ஆட்சியோ **‘ஒடுக்குதல்’** என்ற எல்லைகளைத் தாண்டி மொழி இன அடையாளங்களை **‘ஒழித்தல்’** என்ற இலக்கை நோக்கி பாய்கிறது. இந்தியா பெரும்பான்மையாக இந்துக்களைக் கொண்ட நாடு எனும்போது ஏன் ‘இந்து’ நாடாக இருக்கக் கூடாது என்பதே இவர்களின் அடிப்படையான வாதம். பெரும்பான்மை வாதம் சரியானதா? இது குறித்து தெளிவும் புரிதலும் அவசியமாகிறது.

மதத்தின் அடிப்படையில் ‘பெரும்பான்மை’யை உறுதி செய்யும் வாதங்களுக்கு அம்பேத்கர் தெளிவான மறுப்பை முன் வைக்கிறார்.

இலண்டன் வட்டமேஜை மாநாட்டில் இது குறித்து விவாதங்கள் வந்தபோது அம்பேத்கர் எழுத்து பூர்வமாக இந்த விளக்கங்களை முன் வைக்கிறார்.

**“மெஜாரிட்டி அடிப்படையிலான வாதத்தை முன்வைப்பவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். அதில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று அரசியல் பெரும்பான்மை (Political Majority), இரண்டு - (மத) வகுப்புவாத பெரும்பான்மை (Communal Majority), அரசியல் பெரும்பான்மை மாற்றத்துக்கு உட்பட்டது. அரசியல் பெரும்பான்மைக்குள் அடங்கியுள்ள பிரிவினர் மாறக் கூடியவர்கள் (Class Composition). ஆனால் (மத) வகுப்புவாத பெரும்பான்மை மாற்றத்துக்கு உள்ளாகவே முடியாது. அது பிறப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. அரசியல் பெரும்பான்மை என்ற வட்டத்துக்குள் யார் வேண்டுமானாலும் வரலாம். அது திறந்தே இருக்கும். (மத) வகுப்புவாதப் பெரும்பான்மைக்கான கதவுகள் எப்போதுமே மூடப்பட்டிருக்கும். அரசியல் பெரும்பான்மையின் அரசியல் என்பது ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கும் அகற்றுவதற்கும் அனைவருக்கும் உரிமைகளை வழங்குகிறது. வகுப்புவாதப் பெரும்பான்மையோ இந்து மதத்தில் பிறந்திருப்போருக்கு மட்டுமே உரித்தானது; அவர்கள் மட்டுமே தீர்மானிக்கக் கூடியது.**

- தேசியம், எதேச்சதிகாரம் – மதப் பெரும்பான்மை மூன்றுமே இந்து தேசியத்துக்கு அடிப்படை.
- மதப்பெரும்பான்மை – அரசியல் பெரும்பான்மை குறித்து அம்பேத்கர் தந்த தெளிவான விளக்கம்.
- மதச் சார்பின்மை என்பதே கெட்ட வார்த்தை என்ற ராஜ்நாத் சிங்.

அரசியல் பெரும்பான்மையை உறுதி செய்யும் ஒரு ஜனநாயக ஓட்டத்தில் மதப் பெரும்பான்மை அதற்கான அடையாளத்தோடு எப்படி பங்கெடுக்க முடியும்? மதப் பெரும்பான்மை என்ற அடையாளத்தை அங்கீகரித்து விட்டால் அது பரம்பரை ஆட்சிக்கு வழி திறந்து விடும். பிறகு மதப் பெரும்பான்மை கொடுங்கோல் ஆட்சியாகவே மாறிப் போய்விடும். ஜனநாயகத்தை சீர்குலைத்து விடும்” என்று அற்புதமாக விளக்கம் தந்தார் அம்பேத்கர்.

அடுத்ததாக, மதசார்பின்மை பற்றி குறிப்பிட வேண்டும். பா.ஜ.க.வும் சங்பரிவாரங்களும் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள ‘மதச்சார்பின்மை’ என்பதை முற்றாகப் புறக்கணித்து வருகிறார்கள். இது போலி மதச் சார்பின்மை. சிறுபான்மை சமூகத்தினரை திருப்தி செய்யும் நோக்கம் கொண்டது என்கிறார்கள். 1976ஆம் ஆண்டு இந்திரா பிரதமராக இருந்தபோது அவசர நிலை காலத்தில் அரசியல் சட்டத்தில் 42ஆவது சட்டதிருத்தம் வழியாக சேர்க்கப்பட்டதுதான் சோஷலிசம், மதச்சார்பின்மை என்ற வார்த்தைகள் என்று பா.ஜ.க. வாதிடுகிறது.

“மதச்சார்பின்மை என்பதே மோசமான வார்த்தை (abusive word) அதைப் பயன்படுத்தவே கூடாது. வகுப்பு பதட்டங்களையே இது உருவாக்குகிறது என்று உள்துறை அமைச்சராக இருந்த ராஜ்நாத் சிங் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகவே அறிவித்தார். (நாடாளுமன்ற உரை 26.11.2016). அது மட்டுமல்ல; அரசியல் சட்டத்தின் முகப்புரையிலும் மதச்சார்பின்மை என்ற சொல்லை, சட்டத்தை உருவாக்கிவர்கள் இணைக்கவில்லை என்றும் அம்பேத்கரே அதை விரும்பவில்லை என்றும் நமது இந்துமதமே மதச்சார்பற்றதுதான் என்றும் பதவுரை, பொழிப்புரைகளை எழுதினார் ராஜ்நாத் சிங். ராஜ்நாத் சிங்கிற்கு அரசியல் சட்டம் குறித்த புரிதலே இல்லை என்றே கூற வேண்டும்.

இந்திய அரசியல் சட்டத்தில் ‘ஜனநாயகம்’ என்ற சொல்கூட அதை உருவாக்கியபோது இடம் பெறவில்லை. அதற்காக இந்தியா ஜனநாயக நாடே இல்லை என்றுகூட கூறிவிட முடியுமா? அதே சட்டத்தில்தான் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை; தேர்தலை நடத்தும் சுயாட்சி உரிமைக் கொண்ட தேர்தல் ஆணையம்; தேர்தல் பிரதிநிதித்துவ சட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. சட்டத்தின் உள்ளடக்கமே ‘ஜனநாயக நாடு’ என்பதைத் தெளிவுபடுத்தும்போது அந்த வார்த்தையை சேர்க்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு அரசியல் நிர்ணய சபை வந்தது. அதே பார்வையில்தான் ‘மதச்சார்பின்மை’ என்ற வார்த்தையும் தவிர்க்கப்பட்டது. ஆனால் ‘மதச்சார்பின்மை’ என்பதற்கான உள்ளடக்கங்கள் பல்வேறு சட்டப் பிரிவுகளில் இடம் பெற்றுள்ளன. (மத அடையாளமற்ற) குடிமகன் (பிரிவு 9) மதம், இனம், ஜாதி அடிப்படையில் பாகுபாடு கூடாது (பிரிவு 15), பொது வேலைகளில் பாகுபாடு கூடாது (பிரிவு 16), தனிமனித மத சுதந்திர உரிமை (பிரிவு 25) அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பாகுபாடு கூடாது (29(2), மத அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் பாகுபாடு கூடாது (பிரிவு 325) போன்ற பிரிவுகள் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதை உறுதிப்படுத்துகின்றன; இந்த நிலையில் மதச் சார்பின்மை என்ற வார்த்தை இடம் பெறாததாலேயே இது மதம் சார்ந்த நாடாகி விடாது.

(தொடரும்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 28.10.2021**

## ‘உயர்ஜாதி’ ஏழை ஒதுக்கீடு: ஒன்றிய அரசின் திசை திருப்பும் வாதங்களை உச்சநீதிமன்றம் ஏற்குமா?

உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 சதவீத இடஒதுக்கீட்டை எந்த அடிப்படையில் நிர்ணயித்தீர்கள்? பிற்படுத்தப்பட்டோருக்கு வருமான உச்ச வரம்பு ஆண்டுக்கு ரூ.8 இலட்சம். அதே ‘எட்டு இலட்சம்’ வரம்பை உயர்ஜாதியினருக்கும் நிர்ணயித்தது சம நீதியா என்று சரமாரியான கேள்விகளை எழுப்பியது உச்சநீதிமன்றம்.

நீதிமன்றத்தின் ‘கிடுக்கிப் பிடி’ கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் திணறிப் போய் நின்ற ஒன்றிய அரசு கடைசியாக ‘சின்கோ குழு’ (Sinho) பரிந்துரையில் அடைக்கலம் புகுந்திருக்கிறது. சின்கோ குழு’ திறந்த போட்டியில் போட்டியிடுவோருக்கான கல்வி உதவித் திட்டங்களை பரிசீலிக்க அமைக்கப்பட்ட குழு, அந்தக் குழு தனது பரிந்துரையில் திறந்த போட்டியில் (General Categories) தேர்வு செய்யப்படுவோருக்கும் பிற்படுத்தப்பட்டோரைப் போலவே ‘கிரிமிலேயர்’ நிர்ணயிக்க வேண்டும் என்றே பரிந்துரை செய்திருந்தது.

‘உயர் ஜாதி ஏழை’ என்ற பிரிவுக்கு 8 இலட்சம் வருமான வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று ஏதும் குறிப்பிட்டுக் கூறவில்லை என்று சமூக நலத் துறை அதிகாரிகள் கூறுகிறார்கள். திறந்த போட்டியில் இடம் பிடிக்கும் அனைவருக்கும் ‘சின்கோ குழு’ அளித்த பரிந்துரையை ஒன்றிய அரசு பார்ப்பன உயர்ஜாதியினருக்காக மட்டும் தனியாகக் கொண்டு வந்த 10 சதவீத இடஒதுக்கீட்டோடு இணைத்து உச்சநீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்துள்ளது. அது மட்டுமின்றி பிற்படுத்தப்பட்டோருக்கான ‘கிரிமிலேயர்’ 8 இலட்சமாக 1993ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. உயர்ஜாதி ஏழைகளுக்கான இடஒதுக்கீடு செய்யும் சட்டத்திருத்தத்தை ஒன்றிய ஆட்சி கொண்டு வந்ததோ 2019ஆம் ஆண்டில். 26 வருடத்துக்கு முன்பு பிற்படுத்தப்பட்டோருக்கு நிர்ணயித்த ரூ.8 இலட்சம் வரம்பை முன்னேறிய ஜாதியினருக்கு அப்படியே நிர்ணயித்திருப்பது மிகப் பெரும் சமூக அநீதி. இடையில் ரூபாய் மதிப்பு வருமானம் போன்றவற்றில் எவ்வளவோ மாற்றங்கள் வந்து விட்டன. எனவே, ஒன்றிய ஆட்சியின் இந்த ‘ஓட்டை’ வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்குமா என்பது, இனிமேல் தான் தெரியும். 25ஆம் தேதி விசாரணைக்கு வந்த வழக்கை 28ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்தி வைத்திருக்கிறது. மட்டுமின்றி, 10 சதவீத இடஒதுக்கீடு 50 சதவீத ஒதுக்கீட்டு எல்லையை மீறுவதால் சட்டப்படி செல்லுமா என்ற வழக்கும் உச்சநீதிமன்ற விசாரணையில் இருக்கிறது. இந்தத் தகவல்களை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ (அக்.25, 2021) நாளேடு வெளியிட்டுள்ளது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ஈரோட்டில் கூடிய தமிழ்நாடு மாணவர் கழகம் முடிவு

# மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

***பெரியாரியலைப் பரப்ப இளைஞர்கள் தயாராகி வருகிறார்கள். தமிழ்நாடு மாணவர் கழகம் ஈரோட்டில் கூடி, சமூக நீதி சிந்தனைகளை மாணவர்களிடையே பரப்ப முடிவு செய்துள்ளது.***



தமிழ்நாடு மாணவர் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் 17.10.2021 அன்று காலை 11 மணியளவில், ஈரோடு பிரியாணி பாளையத்தில் நடைபெற்றது.

சென்னிமலை கார்மேகம் வரவேற்பு கூறினார். யாழினி, யாழிசை ஆகியோர் பகுத்தறிவுப் பாடல் பாடினர். தமிழ்நாடு மாணவர் கழகம் பற்றியும், கலந்துரையாடலின் நோக்கம் பற்றியும் திருப்பூர் சந்தோஷ், 'இட ஒதுக்கீட்டிற்கு வந்திருக்கும் ஆபத்து, நீட் தேர்வின் பாதிப்புகள், மதவாத சக்திகளின் சமூக சீர்கேட்டுச் செயல்பாடுகள் ஆகியவை பற்றியும், அவற்றிற்கு எதிர்வினையாற்ற ஒரு வலுவான, சமூகநீதியைக் கொள்கையாகக் கொண்ட மாணவர் அமைப்பின் தேவை' குறித்து தனது அறிமுக உரையில் குறிப்பிட்டார். நிகழ்விற்கு திருப்பூர் சந்தோஷ் தலைமை வகித்தார்.

தொடர்ந்து, சென்னை, திருப்பூர், குமாரபாளையம், மேட்டூர், சேலம், சென்னிமலை, அன்னூர், பல்லடம், மேச்சேரி, பொள்ளாச்சி, பழனி ஆகிய பகுதிகளில் இருந்து கலந்து கொண்ட மாணவர்கள் அனைவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். பின்னர் அவர்கள் தங்களது கருத்துகளை கூறினர். அதன் மீதான கலந்துரையாடலும் நடைபெற்றது.

பள்ளி, கல்லூரி மாணவர்களிடத்தில் கல்வியின் முக்கியத்துவம், கல்விக்கு ஏற்படும் பாதிப்புகளான நீட் தேர்வு, இட ஒதுக்கீட்டிற்கு வரும் ஆபத்து போன்றவற்றை விளக்கும் வகையில் பிரச்சாரம் செய்ய வேண்டும், மாணவர்களிடத்தில் முற்போக்கு சிந்தனைகளை வளர்க்கும் நோக்கில் கலை வடிவிலான நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும், சமூக வலைதளங்களை முறையாகப் பயன்படுத்தி சமூகநீதிக் கொள்கைகளைப் பரப்ப வேண்டும். மூடநம்பிக்கையற்ற சுய ஒழுக்கம் மிகுந்தவர்களாக குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டும், கல்விக்கடன் தேவைப்படும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும், மாணவர் சங்கத் தேர்தல் அனைத்துக் கல்லூரிகளிலும் நடத்தப்பட வேண்டும். வாசகர் வட்டங்கள் மூலம் புத்தக வாசிப்பு பழக்கப்படுத்தப்பட வேண்டும் என்பது போன்ற கருத்துகளை மாணவர்கள் விவாதித்தனர்.

நிகழ்வை, திருப்பூர் கனல்மதி, தேன்மொழி, சந்தோஷ், இரண்யா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி

திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் முகில் இராசு ஆகியோரும் மாணவர்களின் நலன் சார்ந்த கருத்துக்களை கூறினர்.

இறுதியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சென்னிமலை ஷர்மிளா நன்றி கூறினார்.

திருப்பூர் - தேன்மொழி, கனல்மதி, முத்தமிழ், ஈழமாறன், கார்த்திகா, மிதுன், ஆகாஷ், பிரசாந்த், சந்தோஷ், யாழினி, யாழிசை, அகராதி.

திண்டுக்கல் - ஆயுதன், ஆதித்யா

கோவை - விஷ்ணு, மனோ, பொள்ளாச்சி - சபரிகிரி

ஈரோடு - கார்மேகம், சர்மிளா, அறிவழகன், சவுந்தர்யன், ஜோதி லட்சுமி

நாமக்கல் - புகழேந்தி, அறிவுக் கொடி

சென்னை - இரண்யா, பிரவீன் குமார், இளவரசன், புகழ்வளவன், உதயகுமார், எழிலரசன்.

சேலம் - பிரபாகரன், சிவசண்முகம், கோபாலகிருஷ்ணன், வெங்கடேசன், முரளி, பிரதாப், சிவசண்முகம், திவாகர், முருகன், ஜோதிபாசு ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

கரூர் மாவட்ட முன்னாள் கழகத் தலைவர் பாபு, மதிய உணவாக கோழிக் கறி பிரியாணி மற்றும் கலந்துரையாடலுக்கான இடத்தையும் வழங்கினார். கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை செய்தார்.

தீர்மானங்கள் :

1) தமிழக மாணவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, நீட் தேர்வு இரத்து, போன்ற பல்வேறு கல்வி சார்ந்த நடவடிக்கைகளை சிறப்பாகவும், மாணவர்களின் நலன் சார்ந்த நோக்கிலும் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு மாணவர் கழகம் பாராட்டி நன்றி தெரிவிக்கிறது.

2) மாணவர் கழகத் தோழர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

3) புத்தகங்களை வாசித்து மாணவர்கள் பேசும் வகையில் மாதம் மாதம் வாசகர் வட்டம் நடத்துவது.

4) இணையதளப் பயன்பாட்டைப் பயனுள்ள வழியில் அதிகரிப்பது.

5) பாலியல் குற்றங்களைத் தடுக்கும் வகையில் பாலின சமத்துவம், பாலியல் விழிப்புணர்வு ஆகியவற்றுக்கான பாடத்திட்டங்களை உருவாக்கி, மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென தமிழக அரசை வலியுறுத்துகிறோம்.

6) காமராசர் பிறந்தநாளை கலைஞர் அவர்கள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குவது போல் பெரியார் பிறந்த நாளான செப்டம்பர்-17 சமூகநீதி நாளையும் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க வேண்டுமெனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

# வேலூர் மாவட்டத்தில் அனைத்து பெரியாரியலாளர்களையும் ஒருங்கிணைத்து கழகத்தினர் எடுத்த பெரியார் பிறந்த நாள்

காலை 8 மணிக்கு மாவட்ட செயலாளர் சிவா, சொந்த கிராமத்தில் பொது மக்கள் முன்னிலையில் தோழர்கள் ஒருங்கிணைப்பில் அறிவாசான் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தி இனிப்பு வழங்கப்பட்டது.

வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக நகர செயலாளர் பார்த்திபன் தலைமையில் எழுத்தாளர் அழகிய பெரியவன் உள்ளிட்ட தோழர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். பெரியார் படத்திற்கும் மாலை அணிவிக்கப்பட்டது. புரட்சியாளர் அம்பேத்கரின் உருவ சிலைக்கும் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவர் திலீபன் தலைமையில் நெமிலியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. தோழமை இயக்கம் உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர். மாலை சுமார் 300 தோழர்களுக்கு மாட்டிறைச்சி பிரியாணி அளிக்கப்பட்டது.

காலை சுமார் பத்து மணிக்கு வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியில் உள்ள பெரியார் சிலைக்கு திராவிடர் கழகம், திராவிட முன்னேற்ற கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், புதிய தோழர்கள் ஒருங்கிணைந்து சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்றனர். குடியாத்தம் கஸ்பா பகுதியிலுள்ள பெரியார் சிலைக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக நகர பொறுப்பாளர் கோதண்டராமன் ஒருங்கிணைப்பில் அறிவாசான் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி எடுத்தனர்.

காலை 10 மணிக்கு குமார் 1500 சதுர அடியில் பெரியார் ஓவியம் தெருவிளக்கு கோபிநாத் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஒருங்கிணைந்து ஓவியம் தீட்டினர். இப்பணி மாலை 6 மணி வரை தொடர்ந்தது பின்பு 7 மணி அளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது. இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகம், திராவிடர் கழகம், இந்திய குடியரசு கட்சி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். இறுதியாக ஆசிரியர் ஓவியர் பன்முக ஆளுமை கொண்ட தெருவிளக்கு கோபிநாத்துக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மாலை 7 மணிக்கு வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் புட்டவாரபல்லி கிராமத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் அமல்ராஜ் ஒருங்கிணைப்பில் பெரியார் பிறந்தநாள் விழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கிராமத்தின் ஒட்டுமொத்த மக்களும் திரண்டு வந்து விழாவை சிறப்பித்தனர். இவ்விழாவில் சுமார் 400 பேர் பங்கேற்றனர். இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. நிகழ்வினை திராவிடர் விடுதலை கழகத்தின் முன்னணி செயல் வீரர் அமுல்ராஜ் மிகச் சிறப்பாக நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

**மணமகள் தேவை**

சென்னை மயிலாப்பூர் பகுதியைச் சேர்ந்த, அ. பார்த்திபன்,
வயது - 30 கல்வி தகுதி - 10ஆம் வகுப்பு
மாத வருமானம் - ரூ. 15,000/- ஜாதி தடையில்லை.
தொடர்புக்கு : 9962987856

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 28th October 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN